10th March 1966]

SRI C. CHIRANJEEVULU NAIDU : By renovating these canals and tanks, may I know the extent of land that is proposed to be brought under cultivation?

THE HON. SRI V. RAMAIAH : The proposal is to stabilise the existing ayacut.

Water from Bhavanisagar

* 228 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Food be pleased to state whether there is any proposal to let out water from Bhavanisagar at least for a single short-term crop?

THE HON. SRI V. RAMAIAH : No, Sir.

Cauvery water for Madras

* 229 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether there is any proposal for bringing Cauvery water for Madras with a view to supplementing water supply;

(*b*) whether any investigation has been made in this regard; and

(*c*) if so, the details thereof?

THE HON. SRI V. RAMAIAH : An answer [a] is placed on the table of the House.

திரு. காஞ்சி மணிமொழியார் : இந்தக் காவேரி திட்டத்தைப் பற்றி சென்னை மாநகராட்சியிலிருந்து ஏதேனும் திட்டம் சென்னை அரசுக்கு வந்திருக்கிறதா? அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

கனம் திரு. வெ. ராமையா : சென்னை அரசாங்கம்தான் வேண்டிய இன்வெஸ்டிகேஷன் செய்து ஒரு திட்டத்தை உருவாக்கியிருக்கிறது.

திரு. வை. சங்கரன் : இந்தத் திட்டம் முடிந்துவிட்டால் சென்னை நகரத்தில் தண்ணீர்ப் பற்றாக்குறை தீர்ந்துவிடுமா? இதனால் காவேரி டெல்டாவில் தற்போது இருக்கக்கூடிய இரிகேஷன் உரிமைகளுக்குப் பாதகம் ஏற்படாது இருக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமையா : தண்ணீர்ப் பிரச்னை தீர்ந்து விடுவதற்குக் காரணம் இல்லை. ஏனென்றால் மக்களுடைய தொகை, இண்டஸ்ட்ரியல் யூஸ், அதோடு இல்லாமல் இங்கு இருக்கக் கூடிய பெரிய கப்பல் துறைமுகம்—இவைகளினுடைய தேவை களும் வளர்ந்துகொண்டுவருகிற காரணத்தினால் 5, 6 ஆண்டு களுக்கு முன், போதும் என்று நினைத்து நாம் போட்ட

---

[a] Printed as Appendix on pages 448.